மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : வட ஆற்காடு சர்வோதய சங்கம் நிலக் கிரயம் கொடுக்க இசைந்தால் வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு வட்டம், இசையனூர் கிராமத்தில் 1·56 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்ய வேண்டும் என்ற சங்கத்தின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த சர்வோதய சங்கமானது பொதுமக்களுக்கு நன்மை செய்கிற ஒரு இயக்கமாக, கிராமப்புறத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிற காரணத்தால், அவர்களிடத்தில் பணம் பெறாமலேயே கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா, மற்றும் பல வசதிகளை அவர்கள் கேட்கிறார்கள். அதையும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தச் சங்கம் ஆண்டொன்றுக்கு ரூ. 7 லட்சத்திற்கு வியாபாரம் செய்கிறது. வியாபார நோக்கத்தோடு இருக்கிற காரணத்தால் அந்த நிலத்தை இலவசமாகக் கொடுப்பதற்கு இல்லை.

ஸ்ரீரங்கத்திற்குப் பதிலாக திருவரங்கம்.

*167 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஸ்ரீரங்கம் என்று வழங்கப்பட்டு வரும் ஊரின் பெயரை தூய தமிழில் "திருவரங்கம்" என மாற்றி அமைத்திட அரசு முயற்சிகள் மேற்கொண்டதா ?

(இ) ஆம் எனில், அதன் முடிவுகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசின் ஒப்புதலைப் பெறவிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பொதுவாகவே தமிழகத்திலுள்ள வடமொழியில் அழைக்கப்படும் ஊர்களை, அதற்கு முன்னால் ஆங்காங்கு அவைகள் தமிழ் மொழியில் அழைக்கப்பட்டு வந்த முறையில் மாற்றியமைக்க அரசு ஆவன செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரர்களே, தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம் சில ஊர்களின் பெயர்களை தமிழ் மொழியில் மாற்றம் செய்ய வேண்டுமென்று அரசுக்கு ஆலோசனை தெரிவித்தது. அந்த ஆலோசனையை அரசு ஏற்றுக்கொண்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி இருக்கிறோம். ஒப்புதல் வந்தவுடன் மாற்றப்படும்.

Manufacture of gas cylinders.

*168 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a gas cylinder manufacturing unit in this State; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) பற்றவைக்கப்பட்ட உருளைகளையும், அவற்றிற்குத் தொடர்பான பிற சாதனங்களையும் தயாரிப்பதற்காக ரூ. 10 கோடி மதிப்பீடு மூலதனத்துடன் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க, இசைவுக் கடிதம் ஒன்று வழங்குமாறு கோரி இந்திய அரசுக்கு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் விண்ணப்பித்துள்ளது. இந்திய அரசிடமிருந்து இசைவுக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே உள்ள இரண்டு காஸ் சிலிண்டர் தொழிற்சாலைகள் அடிக்கடி உற்பத்தியை நிறுத்தி விடுவதால் சீமை எண்ணெய் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்தத் தொழிற்சாலையை சர்க்கார் துறையில் நிறுவ அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத் தான் அனுமதி எதிர் பார்க்கப்படுகிறது என்று சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இப்போது இந்த காஸ் சிலிண்டர்கள் சென்னை போன்ற நகரங்களில் தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மதுரை போன்ற நகரங்களிலும் பயன்படுத்துவதற்கு ஏதுவான வகையில் அங்கே சப்ளை செய்வதற்கும் அரசு ஏதேனும் வழி வகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கேள்வி காஸ் சிலிண்டர் உற்பத்தியைப் பொறுத்தது. உற்பத்தி செய்பவர்கள் யாருக்கு வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் சப்ளை செய்யலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தக் காஸ் சிலிண்டர் உற்பத்தி செய்வதற்கான அனுமதி எப்போது கேட்கப்பட்டது, அதற்கு என்ன பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த சிலிண்டர் உற்பத்தி செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கம் ஒரு இத்தாலியக் கம்பெனியோடு தொடர்பு கொண்டு ஒரு திட்டத்தை தயாரித்து அனுப்பியது. எப்போது அனுப்பப்பட்டது என்ற தேதி என்னிடத்தில் இல்லை. இதுவரையில் பதில் நமக்கு வரவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த காஸ் சிலிண்டர் பற்றுக்குறை காரணமாக பெண்கள் பெரும் கஷ்டத்திற் குள்ளாக்கி இருக்கிறார்கள். அனுமதி கோரி விட்டோம், எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம் என்று சொல்லியதோடு நில்லாமல், உடனடியாக அதைப் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ? அந்தப் பற்றுக் குறையைத் தீர்ப்பதற்கு துரித நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அனுமதி வராமல் உடனடியாகச் செய்ய முடியாது.

வாலாஜாப்பேட்டை பிரம்பு முடைவோர் கூட்டுறவுச் சங்கம்.

*169 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாலாஜாப்பேட்டை (வட ஆற்காடு)யில் உள்ள பிரம்பு முடைவோர் கூட்டுறவுச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) அதன் நிர்வாகிகள் அரசால் நியமனம் செய்யப்படுகின்றனரா, அல்லது தேர்தல் முறையில் எடுக்கப்படுகின்றனரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1957ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 27ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது.

(இ) சங்க நிர்வாகிகள் தொழிற் கூட்டுறவு பதிவாளரால் 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாள் முடிய நியமனம் செய்யப்பட்டனர். 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1ஆம் நாளுக்கு மேல் இச் சங்கம் தேர்தல் முறையில் நிர்வாகிகளை தேர்ந்து எடுக்க அனுமதிக்கப்பட்டு 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28ஆம் நாளன்று தேர்தலும் நடந்து விட்டது. சங்க விதிகளின்படி ஐந்து இயக்குநர்கள் இடம் பெறவேண்டும். அதில் 2/3 பங்கு இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். மீதி 1/3 பங்கு இயக்குநர்கள் நியமிக்கப்படவேண்டும். நிர்வாகிகளை இயக்குநர் அல்லது இணை இயக்குநர் நியமனம் செய்யலாம். இதன்படி மூன்று இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மீதி இருவர் அரசு சார்பில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

Hostel for students of Industrial Training Institute, Hosur.

*170 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a hostel building for the students of the Industrial Training Institute, Hosur, and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) ஒசூரில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் மாணவர்கள் தங்குவதற்கான நிலையான மாணவர் விடுதி கட்டுவதற்கான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, May I know from the Hon. Minister when it will be completed ?